1978 மார்ச் 15]

வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு கருத்துதான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌந்திரராஜன் அவர்களுடைய கருத்தும். என்றாலும் அதைத் தீவிரமாகப் பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளிலே இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரியர் நல நிதி

*573. வினா—திரு.கே. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளிலும், உயர் தொடக்கப்பள்ளிகளிலும் ஆசிரியர்களது நல நிதி பிடித்தம் செய்து உரிய தேதிக்குள் அஞ்சலகத்தில் கட்டாததால் ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இழப்பு ஏற்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஏற்படும் இழப்பைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) இழப்பு ஏற்படாதவாறு கண்காணிக்கப்படுகிறது.

திரு. கே. சுப்பிரவேலு: அவைத் தலைவரவர்களே, இப்படித் தமிழ்நாடு பூராவும் தனியார் பள்ளிகளில் இருக்கும் நிர்வாகிகள் ஆசிரியர்களிடமிருந்து கட்டணத்தை வசூலித்துவிட்டு அதை உடனடியாக அரசுக்குக் கட்டாமல் காலந்தாழ்த்தி வருகிறார்கள். அதனால் ஆசிரியர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அரசுக்கும் இதிலே இழப்பு ஏற்படுகிறது என்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே தனியார் பள்ளிகளுக்கு ஒரு தனி சுற்றறிக்கை அனுப்பி இதைச் சரியாகக் கண்காணிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகள் பல்வேறு ஆணைகளின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நல நிதி பிடித்தத்தில் இவ்வாறு இடையூறுகள் ஏற்படுவதால் இதை அரசே கணக்குப் பார்த்து இந்தத் தொகையைப் பிடித்துக் கொண்டு எஞ்சிய தொகையை அந்தந்தப் பள்ளிகளுக்குத் தர முன் வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1978 மார்ச் 15

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அப்படியொரு யோசனை இல்லை.

[பிற்பகல் 9-40]

திரு. ஏ. செல்லப்பன் ; பேரவைத் தலைவரவர்களே, தனியார் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, பிடித்தம் செய்யப்பட்ட கட்டாய சேமிப்புப் பணம் இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, அவர்களுக்கு உடனே திருப்பிக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, ஆசிரியர்களிடமிருந்து பிடிக்கக்கூடிய க்ஷேமநல நிதியானது ஒழுங்கான முறையில் கணக்கு வைக்கப்படாததால், அரசாங்கம் அத்தொகையைச் சிறு சேமிப்பு நிதியில் முதலீடாகப் போட்டு, அந்த நிதியை அரசினுடைய பல நல்ல திட்டங்களுக்கு ஏன் பயன்படுத்தக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளுடைய நிர்வாகம் தனிப்பட்டவர்களிடத்தில் இருக்கிற காரணத்தால்தான் இதுவும் அவர்களிடத்தில் இருக்கிறது. ஆகவே, அவர்கள் தவறு செய்கிறபொழுது அந்தத் தவறுகளைக் கண்டிக்கவும் அதன்மேல் நடவடிக்கைகள் எடுக்கவும் சில விதிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும், உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பணி புரியும் ஆசிரியர்கள் பல நேரங்களில் கோர்ட்டுகளைச் சந்திக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறார்கள், தங்கள் சம்பளத்திற்காக. ஆகவே, அரசாங்கம் அங்கீகாரம் கொடுத்திருக்கிற காரணத்தாலே, அவர்களுக்குரிய சம்பளத்தை அரசாங்கம் நேரடியாகக் கொடுத்து, அதிலே அவர்களுக்குச் சேரவேண்டிய சேமநல நிதியைப் பிடித்துக்கொள்கின்ற இந்த உதவியைச் செய்வது அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். பள்ளிகளில் கல்வியின் தரமும் உயர்வாக இருக்கும் என்ற கருத்தை ஏற்று, இந்த அரசாங்கம் அப்படி ஒரு ஏற்பாடு செய்யுமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தற்பொழுது அப்படி ஒரு யோசனை இல்லை.